### தமிழ்நாடு முழுவதும் உற்பத்தியாகும்

# காற்றாலை மின்சாரத்தை முழுமையாக மின்சார வாரியம் எடுத்துக்கொள்கிறது

## இந்திய காற்றாலைகள் சங்க தலைவர் கஸ்தூரி ரெங்கையன் தகவல்

கோவை,ஆக.7–

தமிழ்நாடு முழுவதும் உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரத்தை முழுமையாக மின்சார வாரியம் எடுத்துக்கொள்கிறது என்று இந்திய காற்றாலைகள் சங்க தலைவர் கஸ்தூரிரெங்கையன் கூறினார்.

### காற்றாலைகள்

தமிழ்நாட்டில் நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் சுமார் 12 ஆயிரத்து 800 காற்றாலைகள் உள்ளன. இந்த காற்றாலைகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்கு பருவக்காற்று காலமான மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தடை இல்லாமல் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதன் மூலம் தினசரி அதிக பட்சமாக 7,500 மெகாவாட் திறன் கொண்ட மின்சாரம் உற்பத்தியாகும். ஆனால் வடகிழக்கு பருவக்காற்று வலுவில்லாமல் வீசுவதால் போதிய அளவில் மின்உற்பத்தி செய்ய முடியாது. எனவே ஆண்டுதோறும் காற்றாலை மின்உற்பத்திக்கு தென்மேற்கு பருவக்காற்றையே உற்பத்தியாளர்கள் நம்பி உள்ளனர்.

### மின்உற்பத்தி

இந்த நிலையில் தென்மேற்கு பருவகாற்று கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து வீசத்தொடங்கியது. அந்த காலங்களில் தினசரி 3,500–ல் இருந்து 5000 மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தியானது. பொதுவாக கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடந்த சில மாதங்களில் காற்றாலைகளில் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளதாக உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து இந்திய காற்றாலைகள் சங்க தலைவர் கே. கஸ்தூரி ரெங்கையன் கூறியதாவது:–

காற்றாலைகளில் மின்உற்பத்திக்கு தென்மேற்கு பருவக்காற்று காலம், வடகிழக்கு பருவக்காற்று காலம் என்று 2 காலங்கள் உள்ளன. இதில் தென்மேற்கு பருவக்காற்று காலம் தான் தடையில்லாமல் மின் உற்பத்தி செய்யக்கூடிய முக்கியமான காலமாகும். கடந்த தென்மேற்கு பருவக்காற்று காலம் ஏப்ரல் மாதம் தொடங்கியது.

### வீணாவதில்லை

இதைத்தொடர்ந்து நடப்பு மாதம் வரை காற்றாலைகளில் மின்உற்பத்தி தொய்வில்லாமல் நடந்து வருகிறது. அடுத்த மாதம் (செப்டம்பர்) வரை தென்மேற்கு காற்று காலம் இருக்கும். தற்போது தமிழகத்தில் உள்ள காற்றாலைகளில் இருந்து தினசரி 5 ஆயிரத்து 84 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகிறது. தொடர்ந்து உற்பத்தி அளவு குறையாமல் உள்ளது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக காற்றாலைகளில் உற்பத்தியாகும் முழு அளவிலான மின்சாரத்தையும் மின் வாரியம் எடுத்துக்கொள்கிறது. இதனால் காற்றாலைகளில் உற்பத்தியாகும் மின்சாரம் வீணாகுவது இல்லை. இதனால் காற்றாலைகள் நிறுத்தப்படாமல் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

### உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி

தினசரி சந்தை நிலவரப்படி மின்சாரத்துக்குரிய விலையும் கிடைக்கிறது. இந்த நடவடிக்கை காற்றாலை மின் உற்பத்தியாளர்களை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது. மேலும் தற்போது காற்று வீசும் திறனை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் தொழில்நுட்பம் கையாளப்படுவதால், உற்பத்தியாகும் மின்சாரத்தை மின் வாரியம் எடுத்து பயன்படுத்த உதவிகரமாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.